**கூட்டறிக்கை**

**இலங்கைக்கான சர்வதேச ஊடக மதிப்பீட்டு தூதுக்குழு**

**14 மே 2015**

இலங்கைக்கான சர்வதேச ஊடக மதிப்பீட்டுத் தூதுக்குழு யாழ்ப்பாணம் உள்ளடங்கலாக, இலங்கையில் இருக்கும் ஊடக சுதந்திரத்தின் நிலையை மதிப்பீடு செய்வதற்காக 2015 வைகாசி மாதம் 8ம் திகதி தொடக்கம் 14ம் திகதி வரை இங்கு வருகை தந்திருந்தது. இந்த சர்வதேச தூதுக்குழுவானது, பின்வருவனவற்றால் பிரதிநிதித்துவம் படுத்தப்பட்டிருந்தது. சர்வதேச மனித உரிமைகள் தொடர்பான சாசனத்தின் பிரிவு 19, சட்டத்திற்கும் ஜனநாயகத்திற்குமான மத்திய நிலையம் (CLD) ஊடகவியலாளர்களின் சர்வதேச சம்மேளனம் (IFJ), சர்வதேச ஊடக ஆதரவு (IMS), திறந்த சமூக ஸ்தாபனம் (OSF) சுதந்திர இதழியல் துறை நிகழ்ச்சித்திட்டம், தெற்காசிய ஊடக ஒருமைப்பாட்டு வலையமைப்பு (SAMSN) யுனெஸ்கோ (UNESCO) இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் (SLPI).

சர்வதேச தூதுக்குழு 2015 ஜனவரி மாதம் 8ம் திகதி பதவிக்கு வந்த புதிய அரசாங்கத்தின் பின் சுதந்திர ஊடகத்திற்கான சூழ்நிலையில் ஏற்பட்ட சாதகமான பிரதான மாற்றங்களை வரவேற்கின்றது. இம்மாற்றங்களில் பின்வருவன உள்ளடக்கப்படுகின்றன. அவையாவன: ஊடக வெளியீடுகள், பத்திரிகையாளர்கள் மீது செலுத்தப்பட்ட அழுத்தம், அச்சுறுத்தல் போன்றவற்றை முடிவிற்கு கொண்டுவருவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், இணைய தளங்களின் தடை நீக்கப்பட்டமை, தகவல் அறியும் உரிமைக்காக பாதுகாப்பை வழங்குவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், நாட்டை விட்டு வெளியேறிய பத்திரிகையாளரை இலங்கைக்கு வருமாறு விடுக்கப்பட்ட அழைப்பு, அரச ஊடகங்களில் ஆசிரிய தலையங்கத்திற்கான சுதந்திரம் என்பனவாம். இம்முன்னேற்றங்கள், இத்தூதுக்குழுக் காலத்தில் சந்தித்த அநேக ஊடக பங்காளிகளினால் அங்கீகரிக்கப்பட்டு வரவேற்கப்பட்டன.

அதே நேரத்தில், இக்காலத்தில் சந்தித்த அரசத்தலைவர்களாலும் இவை ஏற்றுக்கொள்ளப்பட்டன. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பௌத்தசாசன அமைச்சர், பொது நிர்வாக அமைப்பு, மகாகாண சபைகள் உள்ளூராட்சியும், ஜனநாயக ஆட்சிக்கான அமைச்சர் கரு ஜயசூரிய, ஊடக தகவல் அமைச்சர் ஜயந்த கருனாதிலக ஆகியோர். சர்வதேச தரத்தை மதிக்கும் வகையில் முற்று முழுதான சூழ்நிலையை உறுதிப்பாடு செய்ய இன்னும் அநேக தேவைப்பாடுகளை நிறைவேற்ற வேண்டியுள்ளது. சுதந்திரமாக அபிப்பிராயங்களை வெளியிடும் உரிமை, பலமான, பன்முகப்பட்ட துறை தோய்ந்த ஊடகத்திற்கான அடிப்படையை இலங்கையில் ஏற்படுத்தவும் அதிகம் செய்ய வேண்டியுள்ளது. அதிக அளவில் தனிப்பட்ட, அரச ஊடகங்களை அளவுக்கதிகமாக அரசியல் மயப்படுத்தப்பட்டமை, செயற்படும் பத்திரிகையாளர்களிற்கும் ஆசிரியர்களுக்கும் சுதந்திரக் குறைபாடு இருந்துள்ளது. ஊடகத்தில் தொழிற்துறை சார்ந்த கடுமையான சவால்களும் காணப்பட்டன. பத்திரிகையாளர்களின் தகைமைகளைப் பொறுத்தவரையில் அதைவிட கல்விப் பயிற்சி நிகழ்ச்சியின் தரம் பத்திரிகையாளர்களுக்கு நடைபெறும் பயிற்சி வாய்ப்புக்களின் தரம் என்பவற்றிலும் சவால்கள் இருந்தன. இந்நிலையை, குறைவான சம்பளம், வேலை செய்வதற்கான தரமற்ற சூழல், பத்திரிகையாளர்களுக்கான நலன்கள், தொழிற்சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கும் உரிமைக்கான தடை, பதவி உயர்வுக்கான முறையில் பலவீனம், ஒழுக்கத்திற்கான தரத்திற்கான ஆதரவின்மை, ஊடகத்தில் இனரீதியான பிளவு, நேர்மறையான செய்தி அறிவிப்புக்கள், இனத்துவேஷக் கலாச்சாரம் என்பன நிலைமையை இன்னும் மோசமடையச் செய்தன. இத்தூதுக்குழு, செவிமடுத்ததில் கடந்த நான்கு மாதங்களில் பத்திரிகையாளர்களிற்கான உடல்ரீதியான அச்சுறுத்தல்கள் குறைவடைந்துள்ளன.

பத்திரிகையாளர்களின் கொலைகள், காணாமல் போதல் தொடர்பான உயர்ந்தளவான குற்றம் புரிந்தவர்கள் தண்டிக்கப்படாத நிலை. இலங்கையில் வடக்கிலும் கிழக்கிலும் உடல் ரீதியான அச்சுறுத்தல் இன்னும் நிலவிவருதல். இதனால் ஆபத்தான நிலையையும் பாதுகாப்பற்ற தன்மையையும் பத்திரிகையாளர்கள் உணர்கின்றார்கள். இவை தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

இக்காரணிகளால், அரசாங்கத்தின் பாதுகாவலனாக, சக்திவாய்ந்த சமூக செயற்பாட்டாளர்களாக செயற்பட்டு பொதுமக்களுக்கு தகவல் அறிவிக்கும் ஊடக ஆற்றல் கடுமையாக பலவீனப்படுத்தப்படுகின்றது. சர்வதேச தூதுக்குழு இலங்கை அரசாங்கத்திற்கும், பாட்டாளிப் பங்காளிகளுக்கும் உதவும் முகமாக இவை சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்காக கீழே தனது பரிந்துரையைச் செய்கிறது. இவை, அக்கறை கொண்ட அனைத்து பங்குதாரர்களுடனும் விரிவான கலந்துரையாடல் நடைமுறையில் செய்யப்பட வேண்டியதொன்றாகும். இப்பிரேரணைகள் அனைத்திற்கும் நாம் சந்தித்த அரச தலைவர்களின் ஆதரவு கிடைக்கப்பெற்றதை அவதானித்தோம்.

1. சுதந்திரமாக அபிப்பிராயத்தை வெளியிடுவதற்காக சர்வதேச உத்தரவாதங்களைப் பின்பற்றி ஒலிபரப்புத்துறையில், விபரமான சட்டத்தை கொண்டுவருதல், ஏனைய விடயங்களுள் பின்வருவன வழங்கப்படுதல் வேண்டும். ஒளிபரப்புதலில், அலைவரிசையை ஒதுக்கீடு செய்வதில் முறையான திட்டமிடுதல் அவசியம், இது டிஜிட்டல் ஒலிபரப்பின் போதும் கடைப்பிடிக்கப்பட வேண்டும். ஒலிபரப்பை ஒழுங்கமைக்க ஒரு சுதந்திரமான அமைப்பு, பொது மக்களை அங்கீகரிக்கும் ஒரு முத்தரப்பு (Three tier) முறை, வணிக, சமூக ஒலிபரப்பாளர்கள், அரசியல் சம்பந்தமான செய்திகளை வெளியிடும் பொழுது பாரபட்சமற்ற, சமநிலையை கடைப்பிடிப்பதற்கான கடப்பாடுகள், அவசியம் இம்முறை ஏனைய சமூக விடயங்களிலும் கடைப்பிடிக்கப்படுதல் அவசியம்.

2. மூன்று அரச ஒலிபரப்புக்கள் - இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் (SLBC) சுயாதீன தொலைக்காட்சி நிறுவனம் (ITN) இவை சுயாதீன பொதுச் சேவை ஒலிபரப்பாளர்களாக, மாற்றி அமைக்கப்பட வேண்டும். மேலும் அவை, ஆசிரிய தலையங்க சுதந்திரமும், பொதுமக்களுக்கு பணியாற்றுவதற்கான தெளிவான உத்தரவாதம் இருத்தல் வேண்டும். பொதுமக்களின் நிதி மூலம் பலனையடையவும், அதனால், சுதந்திரத்தை விட்டுக்கொடுக்காத தன்மையும் வேண்டும்.

3. லேக் ஹவுஸ் பத்திரிகை நிறுவனம் (ANCL) அரசிலிருந்து சுதந்திரமாக செயற்படவும், ஆசிரியத்தலையங்க சுதந்திரத்தை அனுபவிக்கவும் வேண்டும். இதை சரியான வழியில் செய்ய தீர்மானிப்பதற்கு பரந்த பொதுமக்கள் கலந்துரையாடல் நடாத்தப்படல் வேண்டும்.

4. அரசாங்கத்தின் நிதியால் கட்டுப்படுத்தப்படும் அதிகாரசபைகள் மற்றும் அமைச்சுகளிடமிருந்து தகவல்களை அறிந்துகொள்ளும் உரிமையை தனிப்பட்டவர்களுக்கு வழங்குவதற்கான தகவல் அறியும் உரிமைச் சட்டம்.

5. பத்திரிகையாளர்கள், ஊடக தொழிலாளர்கள், ஊடக வெளியீட்டு இடங்கள் என்பவற்றின் தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள் ஊடகவியலாளர்களின் கொலைகள், காணாமல் போதல் போன்றவற்றை விசாரணை செய்வதற்கான ஒரு ஆணைக்குழு நிறுவப்படுதல் வேண்டும். அதற்கு இவற்றை விசாரணை செய்வதற்கான போதிய அதிகாரங்களுக்கான உத்தரவாதம் வழங்கப்படுதல் வேண்டும். இது இவற்றிற்கு பொறுப்பானவர்களின் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதையும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் குடும்பங்களுக்கும் நட்ட ஈடு வழங்குவதையும் உறுதி செய்யும்.

6. பத்திரிகைப் பேரவைச் சட்டம் (Press Council Act) நீக்கப்பட வேண்டும், பத்திரிகைப் பேரவை இல்லாமல் செய்யப்பட வேண்டும். தொழிற்துறை ரீதியான ஒலிபரப்பாளர்க்ள,

பிரசுரிப்பாளர்களிற்கெதிரான முறைப்பாடுகள் தொடர்பாக ஒரு சுதந்திரமான பயனுள்ள முறையை உறுதிப்பாடு செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

7. ஊடகச் சொந்தக்காரர்கள், தமது அங்கத்தவர்கள் சார்பாக வாதாட கலந்துரையாட தொழிற்சங்கங்களை அமைக்க பத்திரிகையாளர்களுக்கும், ஊடக தொழிலாளர்களுக்கும் அங்கீகாரமும் ஆதரவும் வழங்குதல் வேண்டும்.

8. பத்திரிகையாளர்கள் ஊடகத் தொழிலாளர்கள் தொழில் சார்ந்த விடயங்களை பரந்த பன்முக பன்முக பங்குதாரர்களின் கலந்துரையாடல் மூலம் தேவைகளை இனம் கண்டு செயற்படல் வேண்டும். மேலும் உறுதியான செயற்பாடுகளினால் அவை தொடர்ந்து கவனிக்கப்பட்டு தேவைப்படுபவை வழங்கப்படுதல் வேண்டும்.

9. அபிப்பிராயங்களை வெளியிடும் சுதந்திரத்தைப் பொறுத்தவரையில் குடியியல் குற்றவியல் சட்டங்கள் மேற்கொள்ளும் ஊடகக் கட்டுப்பாடுகள் மீளாய்வு செய்யப்பட்டு சர்வதேச தரத்துடன் ஒத்திருக்கச் செய்ய வேண்டும். ஏனைய விடயங்களில் பயங்கரவாத தடைச்சட்டமானது நீக்கப்பட்டு, அபிப்பிராயத்தை வெளியிடும் சுதந்திரத்திற்கு மதிப்பளித்து பயங்கரவாத்திற்கெதிரான நடவடிக்கைக்கும் அபிப்பிராயத்தை வெளியிடும் சுதந்திரத்திற்குமிடையே ஒரு சரியான சமநிலையை கடைபிடித்து, நீதிமன்ற அவமதிப்புகளிற்கான சட்ட விதிகள், கவனத்துடன் செய்யப்பட்ட சட்டவாக்கத்தின் ஊடாக ஒழுங்கமைக்கப்பட்டு பதிலீடு செய்யப்படுதல் வேண்டும்.